1981 மே 6]

மதுரை நீதிமன்றத்திற்கருகிலுள்ள அண்ணா சிலையை செப்பனிடும் பணி.

*வினா எண் 995—திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு கூட்டுறவு சட்ட அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மதுரை நீதிமன்றத்திற்கு அருகில் பழுதடைந்துள்ள அண்ணா சிலையை செப்பனிடும் உத்தேசம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மதுரை நீதிமன்றம் அருகில் பழுதடைந்துள்ள அண்ணா சிலை செப்பனிடப்பட்டு தங்க வண்ணம் பூசி 25—3—1981-க்கு முன்னதாக வேலைகள் முடிக்கப்பட்டு விட்டன.

[முற்பகல் 9-20]

திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிலைகளை நிறுவுவதற்கு முன்பாகவே, அவைகள் நீண்ட நாட்கள் நிலைத்து நிற்கவும், அடிக்கடி பழுதுபடாமல் இருக்கவும் தேவையான நல்ல யோசனைகளை அளிக்கும் பொருட்டு சிலைகள் பராமரிப்புக் குழு ஒன்று அமைக்க அரசுக்கு உத்தேசம் இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன் ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன அந்த எண்ணங்களை எல்லாம் கருத்தில் கொண்டுதான், அதை நிறுவுவதற்கு முன் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. பின்னால் அவைகள் ஒரு வேளை பழுது பட்டால், அவைகளை பழுது பார்ப்பதிலே காலதாமதம் ஏற்படுவதற்கு வேண்டுமானால் வாய்ப்பு ஏற்பட்டிருக்கலாம்.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

விருத்தாசலம் எண்ணெய் பிழியும் ஆலை.

*வினா எண். 996—திரு. ஆர். தியாகராசன் : மாண்புமிகு கூட்டுறவு சட்ட அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை அளிப்பாரா—

(அ) தென் ஆற்காடு மாவட்டம் விருத்தாசலம் 1976 ஆம் ஆண்டு சூரிய காந்தி எண்ணெய் பிழியும் ஆலை 60 இலட்ச ரூபாய் மதிப்பில் ஆரம்பிக்க அனுமதி வழங்கப்பட்டு சூரிய காந்தி விதை கிடைக்காத காரணத்தினால் மணிலாப் புண்ணாக்கை அரைத்து எண்ணெய் எடுக்க 3 ஆண்டுக்கு அனுமதி அளித்தது அரசுக்குத் தெரியுமா ?

[1981 மே 6

(ஆ) 3 ஆண்டுகள் முடிந்த பிறகு மறுபடியும் இயங்க மத்திய அரசால் அனுமதி மறுக்கப்பட்டது உண்மையா ?

(இ) ஆம் என்றால் மறுபடியும் ஆலை செயல்பட மத்திய அரசிடமிருந்து அனுமதி பெற அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : (அ) ஆம்.

(ஆ) மாநில அரசின் வேண்டுகோளுக்கு இணங்க மத்திய அரசு நிலக்கடலை போன்ற முக்கிய எண்ணெய் வித்துக்களை அரைப்பதற்கு இவ்வாலைக்கு 1—10—1980 முதல் 31—3—1981 வரை தாற்காலிக அனுமதி அளித்துள்ளது.

(இ) நிரந்தர உரிமம்பெற தக்க நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது.

திரு. ஆர். தியாகராசன் : மரியாதைக்குரிய சட்டப்பேரவைத் தலைவர் அவர்களே, தென் ஆற்காடு மாவட்டத்திலே, விருத்தாசலத்திலே உள்ள அந்த ஆலை ஆரம்பிக்கப்பட்ட பிறகு 3 மாதம் அல்லது 6 மாத கால அளவில்தான், மிகக் குறுகிய கால அளவில்தான் ஆர்டர்கள் கிடைப்பதால் அங்குள்ள தொழிலாளர்கள் பாதிக்கப்படுகிறார்கள். அதுவுமல்லாமல் அங்கே சூரிய காந்தி விதைகள் தேவையான அளவு கிடைக்கவில்லை. உற்பத்தியும் ஆகவில்லை. ஆனால் மணிலாப் பயிர்கள் தொடர்ந்து கிடைக்கக் கூடிய சூழ்நிலை இருப்பதால், அந்த ஆலையில் மணிலாப் பயிரையே தொடர்ந்து அரைத்து, மில்லை மூடாத அளவிற்கு மத்திய அரசு அனுமதி அளித்திருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன் ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவை தலைவர் அவர்களே, அந்த ஆலை தொடர்ந்து நடைபெற முடியாமல் இருப்பதற்கே காரணம் மத்திய அரசு தான். சூரிய காந்தி விதையிலிருந்து எண்ணெய் எடுப்பதற்காகத்தான் ஆரம்பத்திலே அந்த ஆலை தொடங்கப்பட்டது. ஆனால் போதிய அளவிற்கு சூரிய காந்தி விதைகள் கிடைக்காத காரணத்தால், அந்த ஆலையை மூடாமல் இருக்கும் பொருட்டு, மணிலாப் பயிரை அரைத்து எண்ணெய் எடுப்பதற்கு மாநில அரசு, மத்திய அரசை அனுமதி கேட்டு, அவர்களும் தற்காலிக அனுமதியாக 3 ஆண்டு காலத்திற்கு அனுமதி வழங்கினர். அதற்குப் பிறகு, அந்த 3 ஆண்டுகள் கழித்து, மீண்டும் அனுமதியைக் கேட்ட போது மறுத்துவிட்டார்கள். ஆனால் தற்போது 6 மாத காலத்திற்கு மட்டுமே தற்காலிக அனுமதி தந்திருக்கிறார்கள். நிரந்தர அனுமதி வேண்டும் என்று பலமுறை மத்திய சர்க்காரை இந்த அரசு வற்புறுத்தி வருகிறது ; மீண்டும் வற்புறுத்தும், வற்புறுத்திக் கொண்டேயிருக்கும்.